விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 24 வெள்ளிக்கிழமை (09.08.2002) தொலைபேசி 3378 ஒலி 233




## யாழ் மத்திய பஸ் நிலயத்தில்
## சைக்கிள் - பஸ் விபத்து குடும்பஸ்தர் நசியுண்டு மரணம்


(யாழ்ப்பாணம்)

சீ.ரி.பி பஸ் சைக்கிள் விபத்தில், குடும்பஸ்தர் ஒருவர் பஸ் சில்லில் அகப்பட்டு, தலைப்பகுதி நசியுண்டு, மூளை வெளியேறிய நிலையில் அவ விடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முற்பகல் 10.15 மணியளவில் யாழ் மத்திய பஸ் நிலயத்தில், இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த பயஸ் றெஜினோல்ட் சிறில் (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் யாழ் பொலிசாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில்

(08ம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் பஸ்சின் சில்லுக்குள் அகப்பட்டுக்கிடப்பதை முதல் படத்திலும், இரத்த வெள்ளத்தில் கிடக்கும் அவரது சடலம் மீட்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## புலிகள்-கடற்படை அதிகாரிகள் வேலணையில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கடற்படை அதிகாரிகளும் நேற்று வேலணை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

முற்பகல் 10மணி தொடக்கம் பிற்பகல் 1மணிவரை இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் அரசியல் பிரமுகர் அருந்தவம் ஆகியோரும் கடற்படை சார்பில் காங்கேசன்துறை கடற்படை அதிகாரி தந்தெனிய ஊர்காவற்றுறை கட்டளை அதிகாரி எதிரிவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின்போது தீவகப்பகுதியில் மீனவர்கள் தாக்கப்படுகின்றமை,

(02ம் பக்கம் பார்க்க)

### ஈ.பி.டி.பி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் சுதுமலையில் கைது செய்யப்பட்ட பாட்ஷா (காராளசிங்கம் சிந்துபரன்) தமது கட்சி உறுப்பினர் அல்ல என்றும் அவர் ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்னர் கட்சியில் இருந்து விலக்கப்பட்டவரென்றும், ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அலுவலகம் நேற்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கட்சியில் இருந்து விலக்கப்பட்ட பிரஸ்தாப நபரான பாட்ஷா கட்சி நடவடிக்கையோடு எந்தவித தொடர்பும்

### புத்தளம் சிறைச்சாலையில் 7 கைதிகள் தப்பினர்

(புத்தளம்)

புத்தளம் சிறைச்சாலையில் சிறைச்சாலை அதிகாரிகளைத் தாக்கிவிட்டு 7கைதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

நேற்ற அதிகாலை 3மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது கைதிகளால் தாக்கப்பட்ட அதிகாரி ஒருவர் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தப்பி ஓடிய ஏழு கைதிகளும் நேற்று புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருந்தார்கள்

## ஜனாதிபதி அரசுடன் இணங்கவேண்டும்
# அரசியல் நெருக்கடியால் சமாதானம் நகர்கிறது!
## அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**ஜனாதிபதியிடம் உள்ள பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை மீளப் பெறுவதற்காகவே அரசாங்கம் திருத்தச் சட்ட மூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. அதற்கு அவர் இணங்கத் தவறின் பொதுத் தேர்தல் ஒன்றை சந்திப்பது தவிர்க்க முடியாததாகும். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

இச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தகவல் தருகையில், எத்தனை தேர்தல்கள் நடைபெற்

கட்சியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாது. இது அரசுக்கு நன்கு தெரியும். இந் நிலையில்தான் சமாதானத்தை விரும்

நடத்த முடியும் என்று அரசு நம்புகின்றது.

இந்நிலைக்கு மாற்றுவழி எதுவும் கிடைக்காத நிலையில் ஜனாதிபதியின் இணக்கப்பாடும் கிடைக்காது

ஒருவர் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தப்பி ஓடிய ஏழு கைதிகளும் நேற்று புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கட்சியில் இருந்து விலக்கப்பட்ட பிரஸ்தாப நபரான பாட்ஷா கட்சி நடவடிக்கையோடு எந்தவித தொடர்பும்

(02ம் பக்கம் பார்க்க)

இச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தகவல் தருகையில்,

எத்தனை தேர்தல்கள் நடைபெற்றாலும் எந்தவொரு கட்சியும் தனிக் கட்சியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாது. இது அரசுக்கு நன்கு தெரியும். இந்நிலையில்தான் சமாதானத்தை விரும்பும் சிறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று ஸ்திரமான ஆட்சியை

கின்றது.

இந்நிலைக்கு மாற்றுவழி எதுவும் கிடைக்காத நிலையில் ஜனாதிபதியின் இணக்கப்பாடும் கிடைக்காது போனால் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுவதை எவராலும் தடுக்க

(02ம் பக்கம் பார்க்க)

# வை.கோ - நெடுமாறன் ஆகியோரின் வீடுகள் நேற்று சோதனை இடப்பட்டன

(சென்னை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் ஆகியோரது வீடுகள் நேற்று தமிழக கியூப் பிரிவு பொலிசாரால் அதிரடிச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்தமைக்காக பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கபட்டிருக்கும் இரு தலைவர்களது வீடுகள் உட்பட்ட ம.தி.மு.க. தொண்டர்கள் எட்டுப் பேரின் வீடுகளும் பொலிசாரால் சோதனையிடப்பட்டன.

வை.கோவின் சென்னை மற்றும் கலிங்கப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள வீடுகளும் சென்னையிலுள்ள ம.தி.மு.கவின் தாயகப் பணிமனையும் காலை 8 மணி முதல் பிற்பகல் 1.45 மணிவரை தீவிர சோதனைக்கு

(02ம் பக்கம் பார்க்க)

# ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இன்று நோர்வே செல்லுவார்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று நோர்வேக்கு சென்று அந் நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இன்று நோர்வே செல்லும் அவர் ஒரு வாரகாலம் அங்கு தங்கியிருப்பார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதிலுள்ள தடைகள் குறித்தும்,

தாய்லாந்து பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பது தொடர்பாகவும் இப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## தம்மீது தாக்குதல் நடத்தியதை கண்டித்து

# சி.ரி.பி. பஸ் சாரதி, நடத்துனர் நேற்று திடீர் பகிஷ்கரிப்பு

## போக்குவரத்து இன்றி மக்கள் பெரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய பஸ் நிலையப் பகுதியில் சி.ரி.பி. பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள், தாக்கப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்து சாரதிகள் நடத்துனர்கள் நேற்று பஸ்களை சேவையில் ஈடுபடுத்தாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் சகல பஸ்களையும் முற்பகல் 11 மணியளவில் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு எடுத்துச் சென்றனர்.

இதனால் மத்திய பஸ் நிலையப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

பஸ்ஸில் பயணம் செய்யும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போக்கு

(02ம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள்-வான்

# வதிரியில் விபத்து இளைஞர் பலி

(மந்திகை)

நெல்லியடி வ்திரிச் சந்தியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஹயேஸ் வான் விபத்தால் மோட்டார் சைக்கிள் ஓடிச் சென்ற வதிரியைச் சேர்ந்த இராசையா கிருஷ்ணபவன் (வயது 21) என்ற இளைஞன் மரணமானார். இவரது சடலம் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவருடன் மோட்

(08ம் பக்கம் பார்க்க)

## வீதியை திறக்கக் கோரி

# நாளை மறியற் போர்

## இன்று வரை அவகாசம்

(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியையும் யாழ் ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் பருத்தித்துறை வதியை இன்று முதல் மக்கள் பாவனைக்கு அனுமதிக்காவிட்டால் இரு சந்திகளிலும் நாளை காலை 10 மணி முதல் 12 மணிவரை அமைதியான முறையில் அடையாள மறியல் போராட்டம் ஒன்றை வலி தென்கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் நடத்தவுளளதாக ஒன்றியத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

(ம-06)

சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

திருமதி ஆண்டியையா முத்துப்பிள்ளை என்பவருடைய தேசிய அடையாளஅட்டை இல(468473313V) மற்றும் பலஆவணங்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் திருமதி யோகேஸ்வான் பூரணம் 19, செம்மணி வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் கொடுத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.

(5798)

# பிரதமர் - ஜனாதிபதி முறுகல்

# அரசு - புலிகள் பேச்சு தாமதம்

## அமைச்சர் டிரோன் பேட்டி

(புதுடில்லி)

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ளமுறுகல் நிலைகாரணமாக அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை காலதாமதமாகி வருவதாக இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ள வெளிநாட்டமைச்சர் டிரோன் பெனான்டோ நேற்று அங்குநடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்

இச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது

நாட்டின் அரசியல்நிலை எப்படி இருந்தபோதும் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் முதல்வாரத்தில் அல்லது அதற்கு சிலதினங்களுக்கு பிற்பாடு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது

எனினும் தற்போதய அரசியல்நெருக்கடியில் ஒரு பொதுத்தேர்தல் வருமானால் அப்பேச்சுவார்த்தை மேலும்காலதாமதமாகலாம் என்றும் தெரிவித்துள்ளார்

தமிழ்நாட்டில் வை:கோபாலசாமிகைது செய்யப்பட்டமை தொடர்பாகச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது அதுபற்றி எதுவிதமானகருத்தையும்கூறவிரும்பவில்லை என்று கூறினார்.

இதேவேளை இன்னுமொரு செய்தியாளர் இலங்கை அமைச்சர் பெ·சந்திரசேகரன் வை.கோபாலசாமியை விடுதலைசெய்யக் கோரியது தொடர்பாக கேட்கப்பட்டபோது அதுஅமைச்சர்சந்திரசேகரனின்கருத்து என்றும் அநுஅரசின் கருத்துஅல்ல என்றும் கூறினார்.(ம)

### புலிகள்

அவர்கள் கடலில்எதிர்நோக்கும் சிரமங்கள், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி அடிக்கடி மூடப்படுகின்றமை மற்றும் விடுதலைப்புலிகள் தீவகத்தில்அரசியல்பணிகளை முன்னெடுப்பதைத் தடுக்கும் வகையில் கடற்படையினர் செயற்படுவதுஎன்பனகுறித்து புலிகள்தரப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட படையதிகாரிகள் அவற்றில் சிலவற்றை நீக்குவதற்கு விரைந்துநடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

(இ)

### யாழ் பொலிஸ்

தொடர்ந்தனர்:

இதனையடுத்து மறியலில் ஈடுபட்டவர்களில் ஒருசிலரை பொலிசார் அழைத்துச் சென்று அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன் பிரஸ்தாப ஆட்டோசாரதியைவிசாரித்துவிட்டு விடுதலை செய்வதாகவும் உறுதியளித்தனர்.

இவ் உறுதிமொழியை அடுத்து ஆட்டோ சாரதிகள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை யாழ் பஸ் நிலையப்பகுதியில் இடம் பெற்றவிபத்துச் சம்பவத்தையடுத்து பஸ்சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் சிலரால் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலுக்கு இலக்காகி மீசாலையைச் சேர்ந்த பஸ்சாரதி கே·கனகரட்ணம் (வயது46)என்பவர் காயமடைந்தநிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஆட்டோசாரதிகள் என பஸ்நடத்துனர்கள், சாரதிகள் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாட்டையடுத்தே பிரஸ்தாப ஆட்டோசாரதி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டமை இங்குகுறிப்பிடத்தக்கது'

இதேவேளை பிரஸ்தாப ஆட்டோசாரதி நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

(இ:6,59,2)

### எக்ஸ்போ விமானசேவை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஞாயிறு, திங்கள் கிழமைகளில் எக்ஸ்போ விமான சேவையின் முதலாவது சேவை இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானசேவையில் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டுக்களைப் பெற்றவர்கள் மீள்பதிவுகளை மேற்கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும் இரண்டாவது விமானசேவையில் பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த)

### ஈபிடிபி

இல்லாதவர். அவர் கட்சியில் இருந்து விலக்கப்பட்ட செய்தி, உள்ளூர் மற்றும் கொழும்பு தினசரிகளில் ஏற்கனவே வெளியிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

(இ)

### அரசியல்

முடியாது.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை காரணமாக அரசுக்கும்' விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள் வெகுதூரத்திற்கு செல்வதாக உள்ளது. எனவே சமாதானத்தை எட்டுவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசுடன் இணங்கி செயற்பட முன்வரவேண்டும் என்றும் அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்:

(ம)

### சீரிபி பஸ்

வரத்தின்மையினால் பெரும் சிரமமடைந்தனர்.

தூரஇடங்களுக்குச் செல்லும் பயணிகளும் சீசன்ரிக்கட் பயணிகளும் அவஸ்தைப்பட்டனர்.

இதேவேளை மேற்படி பகிஷ்கரிப்பு குறித்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்கள் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

யாழ்பஸ்நிலையத்தில்இடம்பெற்ற விபத்துச்சம்பவத்தையடுத்து விபத்துக்குள்ளானவருடன் தொடர்பில்லாத ஆட்டோ, மற்றும் மினி பஸ்உரிமையாளர்கள் அடங்கிய கும்பல்ஒன்று பஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் அலுவலகத்தையும் சாரதிகள்மற்றும் நடத்துநர்களையும் தாக்கியது.

இதனால் எமதுபாதுகாப்புக்கு உத்தரவாதமில்லாத நிலையில் பஸ்களை டிப்போவுக்கு கொண்டுசென்றோம்.

இந்நிலையில் எமது பாதுகாப்பை உறுதிசெய்து தாக்குதலில்ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்வரை தொழில்சங்கப் போராட்டம்தொடருமென்று அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமாலை 5 மணிதொடக்கம் சிலபஸ்கள் சேவையில் ஈடுபட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

### வை கோ

உட்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தமைக்காக பொடா சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இரு தலைவர்களது வீடுகள் உட்பட ம.தி.மு.க. தொண்டர்கள் எட்டுப்பேரின் வீடுகளும் பொலிசாரால் சோதனையிடப்பட்டன

வை. கோவின் சென்னை மற்றும் கலிங்கப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள வீடுகளும் சென்னையிலுள்ள ம.தி.மு.கவின் தாயகப்பணிமனையும் காலை 8-00 மணி முதல் பிற்பகல் 1-45 மணிவரை தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அத்துடன் வை. கோவின் புதுடில்லியில் உள்ள வீடும் தமிழக பொலிசாரால் சோதனையிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் வை. கோ. கொண்டுள்ள தொடர்பு குறித்த ஆதாரங்களைத் திரட்டவே இச்சோதனை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழர்தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறனின் சென்னை மற்றும் மதுரையில் உள்ள வீடுகளிலும் கட்சி அலுவலகத்திலும் கியூப் பிரிவுப் பொலிசாரின் சோதனை நேற்றிரவு வரை இடம்பெற்றது'

(இ)

# தேர்தல் திணைக்களம் தேர்தலுக்கு தயாராகிறது

(கொழும்பு)

திடீர்ப் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுமானால் அத்தேர்தலைச் சந்திப்பதற்கு தேர்தல்திணைக்களம் தயாராகிவருவதாக உதவித்தேர்தல் ஆணையாளர் சேனனாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ந் திகதி வடக்கு கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேலைகளில் தேர்தல் திணைக்களம் தற்போது ஈடுபட்டிருப்பதாகவும் இதே நேரம் திடீரென பொதுத் தேர்தல் அறிவிப்புவருமாயின் அதனையும் எதிர்கொள்ளத் தேர்தல்திணைக்களம் தயாராகிவருவதாக உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ம)

# மலேசியா அமைச்சர் கேதீஸ்வரத்திற்கு நிதிஉதவி

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சேதமுற்றிருக்கும் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு மலேசிய கைத்தொழில் அமைச்சர் டத்தோ ஸ்ரீ எஸ. சாமிவேலு நிதி உதவி வழங்கியுள்ளார்.

இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைவந்துள்ள மலேசியா கைத்தொழில் அமைச்சர் டத்தோஸ்ரீ.எஸ். சாமிவேலு திருக்கேதீஸவரம் ஆலயத்திற்கும் விஜயம்செய்திருந்தார்.

ஆலயத்திற்குவிஜயம்செய்த மலேசியா அமைச்சர் ஆலய புனருத்தாரணவேலைகளுக்கு 2லட்சத்து 50ஆயிரம்ரூபாவை ஆலய பரிபாலனசபையிடம் கையளித்து இத்தகைய தொருசந்தர்ப்பத்தை அளித்த அமைச்சர் மலிந்த மொறகொடவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்,

(ம)

# ஊர்வலத்தில் வழங்க 1 இலட்சம் போஸ்டர்கள்

(கொழும்பு)

ஜே.வி.பி. யின் பிரசாரச் செயலளர் விமல் வீரவன்சவினதும், அநுரா பண்டாரநாயக்காவினதும் படங்கள அச்சடிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் போஸ்டர் ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளது.

12 ஆம் திகதி எதிர்க்கட்சியினால் நடத்தத் திட்டமிட்டுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது கொழும்பு நகரெங்கும் ஒட்டுவதற்கு இவ்வாறான சுமார் ஒருலட்சம் போஸ்ட்டர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினால் அடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

விமல்வீரவன்ச, அநுரா பண்டாரநாயக்கா ஆகியஇருவரும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு மக்களைக் கேட்டுக்கொள்வதாக அந்தப் போஸ்டர்களில் வாசகம் காணப்படுகிறது.

போஸ்டர்கள் அடிக்கப்பட்ட சம்பவம் அம்பலத்திற்கு வந்ததையடுத்து அந்தப் போஸ்டர்கள் ஒட்டப்படுவதைத் தடுக்குமாறு பொலிஸ் மாஅதிபருக்கு கடிதம் ஒன்றை விமல்வீரவன்ச அனுப்பிவைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

## மூக்குக் கண்ணாடி

மானிய விலையில் வழங்குதல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்.

டி·ஏ·பி. ஜெயசிங்க ஹெமி சரவணா

நிறுவனத்தின் அனுசரணையுடன்

மானிய விலையில் மூக்குக்கண்ணாடி

வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே எம்முடன் தொடர்பு கொண்ட சனசமூக நிலையங்கள் கண்ணாடிக்குப் பதிவுசெய்தவர்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

காலம் :- 2002.08.11 ஞாயிற்றுக்கிழமை.

நேரம் :- காலை 9.30 மணி

இடம் :- தலைமைக் காரியாலயம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

க கமலசேகரன் (ஜே பி.யு.எம்.)

தலைவர்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,

சுன்னாகம்.

(4832)

### ஆளும், எதிர் தரப்புகளை சந்தித்து

# தற்போதைய நிலை பற்றி பவ்ரல் அமைப்பு விளக்கம்

(கொழும்பு)

நேர்மையான, நியாயமான மக்கள் இயக்கத்துக்கான தூதுக்குழு (பவ்ரல்) எதிர்க்கட்சித் தலைவர்மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் ஆகியோரை அண்மையில் சந்தித்துள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் சமாதான முன்னெடுப்பு தொடர்பாக இச்சந்திப்பில் பேசப்பட்டதாக அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளமான எதிர்காலத்தைக்கருத்திற்கொண்டு இரு கட்சிகளும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தைத் தாம் வலியுறுத்தியிருப்பதாகவும்,

தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று இடம் பெறுவது குறித்து மக்கள் ஆர்வம்கொண்டிருக்கவில்லை

தேர்தல் இடம் பெறின் மீண்டும் ஓர் இரத்தக்களரிக்கு அது வழிவகுக்கும் என அவர்கள் எண்ணுகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தியதாகவும் ரொட்றிக்கோ தெரிவித்தார்;

(உ)

# செய்தித் துளிகள்

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

பொருட்கள் இறக்குமதியாளர்கள் அனைவருக்குமான ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பளையில் உள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில் அனைத்து இறக்குமதியாளர்களையும் தவறாது பங்கு கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (உ

## வீதிஒழுங்கு

### கலந்துரையாடல்

(சுதுமலை)

எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவகாலத்தில்மேற்கொள்ளப்படவுள்ள வீதிப் போக்குவரத்து ஒழுங்கு தொடர்பாக மக்கள் நலன் புரிச் சங்கத்தின் கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2 00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஷ-252)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்படவட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சந்தான பாரதியின் ''மகாநதி'' எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும்கலந்து கொள்ளலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க உறுதி

யாழ்ப்பாணம் கண்ணாபுரம் குடியேற்றத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட 75 குடும்பங்களின் காணி உறுதிகளைப் பெற்றுத் தருவதென தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் உறுதியளித்துள்ளார்.

மேற்படி குடியேற்றத்திட்டத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பாராளுமன்றஉறுப்பினர், அங்கு வாழ்கின்ற குடும்பங்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

இத் திட்டத்தில் 1983 ல் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை காணிகளுக்குரிய உறுதிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## சமாதான வேலைத்திட்டவிளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய சோஷலிசக் கட்சி, சோஷலிச வேலைத்திட்ட அடிப்படையில், தொழிலாளி வர்க்க,பாதிக்கப்பட்ட மக்களின் மத்தியில் இனவாதத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் எதிராக எடுத்துச் செல்லும் போராட்டங்களைப் பற்றி, வடமாகாண மக்களுக்கு விளங்க வைப்பதற்காக இம் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் அப்பிரதேசங்களுக்கு செல்வதற்கு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய சோஷலிசகட்சியின் பிரதான தலைவர்களும் தொழிறசங்கத்தலைவர்களும் பங்குபற்றும் இந்த வேலைத்திட்டம்ஐக்கியசோஷலிசகட்சியின் யாழ்ப்பாண பிரதான அமைப்பாளரான தோழர் க.தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும்

(பந்திகை)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு முதலியார் சின்னத்தம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ இராகவன் தலைமையில்நடைபெறும் இந் நிகழ்வில் வாழ்த்துரையை மன்னவன் கந்தப்பு, அதிபர் வே. சிவசிதம்பரம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நூற்றாண்டு மலர் வெளியீட்டுரையை கோட்டக்கல்வி அதிகாரி க. அம்பலவாணர், விரிவுரையாளர் சிவராஜசிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அமரர் வீரபாகு சிற்றம்பலம், அமரர் பண்டிதர் வீரகத்தி, அரசியல் தலைவர் அமரர் மு. சிவசிதம்பரம் ஆகியோரின் நினைவு பேருரைகளும் நடைபெறவுள்ளன. (உ-23,4)

## சமுர்த்தி சிறுகுழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சமுர்த்தி சிறு குழுக்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் இச் சிறு குழுக்களில் அங்கம் பெறத் தகுதிபெற்றுள்ளன. (உ)

## செயலணி அமைப்பு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் முன்பள்ளிக் கல்வி மற்றும் குழந்தைப் பராய அபிவிருத்திக் கல்வியை மேற்பார்வையிட கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான செயலணி கடந்தவாரம் அமைக்கப்பட்டுள்ளது.

இச் செயலணியின் தலைவராக மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜாவும், செயலாளராக வடமராட்சி வலய முன்பள்ளித் திட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலனும் தரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இச் செயலணியில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளூராட்சித் திணைக்களம் என்பவற்றின் பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் கல்விப்பணிப்பாளர் செல்வி. இ. பெரியதம்பி, யாழ். உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி. இ. யோகராசா, மற்றும் கியூடெக் பணிப்பாளர் வணபிதா. சீ. ஜீ. ஜெயக்குமார் அடிகள் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (உ-77)

## கிளி. வாசி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

'சைக்கிள் போக், உடைந்து முகம்குப்புற விழுந்ததினால் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த த. குமரதாஸ் (வயது35) என்பவரேஇவ்வாறுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-6)

# சாவ. நகரசபையில் 60 இலட்சம் செலவில் வேலைத் திட்டங்கள்

## இவ்வருட இறுதிக்குள் முடிவடையும்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை , 60 லட்சம் ரூபா செலவில் பல்வேறு விதமான வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

சபையின் தலைவர் பெனடிக்றதனபாலசிங்கம்தலைமையில் அண்மையில் நகரசபைக் கூட்டம் இடம்பெற்ற போது, அதன் நிதியில் இருந்து 50லட்சம் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களையும் மாகாண சபை நிதியான10 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களையும் இவ்வருட இறுதிக்குள் நிறைநேற்றுவதென முடிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையின் பொது நூலகக் கட்டிடத்திருத்தத்துக்கு 12லட்சம்ரூபாவும், ,பஸ் நிலைய கொட்டகைதிருத்தத்துக்கு3லட்சத்து 40ஆயிரம் ரூபாவும் நுணாவில் கிளை நூலகத் திருத்தத்துக்கு 3லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், மீன் சந்தை முற்பகுதி திருத்தத்துக்கு 40ஆயிரம் ரூபாவும்,

இறைச்சிக் கடை திருத்தத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும் நகரசபை எல்லைச்சுவர்திருத்தத்துக்கு 34 ஆயிரம் ரூபாவும் பொது நூலககட்டிடமேற்பகுதி பிரிவிடுதலுக்கு 60 ஆயிரம் ரூபாவும் கச்சாய் மகிழங்கேணி வீதி திருத்தத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும் கல்வயல் பழையபாடசாலை வீதியிலுள்ள கிணறு திருத்தத்துக்கு 25ஆயிரம் ரூபாவும் நுணாவில் மேற்கு இளைப்பாறும் மண்டபமும் கிணறு திருத்தத்துக்கும்25 ஆயிரம் ரூபாவும் பெருங்குளம் சங்கத்தானை வீதி திருத்தத்துக்கு 2 லட்சத்து 20ஆயிரம் ரூபாவும்

4-5 எல்லை வீதி திருத்தத்துக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும்மீன்சந்தை திருத்தத்துக்கு 10 லட்சம் ரூபாவும் மரக்கறி கொட்டகை மீள் நிர்மாணத்துக்கு 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித் தொதுக்கப்பட்ட மாகாண சபை நிதியில் இருந்து ஐயர்ஒழுங்கை திருத்தத்துக்கு 3லட்சம் ரூபாவும் கல்வயல் சண்முகானந்தா வீதி திருத்தத்துக்கு 2லட்சம் ரூபாவும்பிரமாணஅடிப்படையிலான மூலதனநன் கொடையில் இருந்து பொலிஸ்நிலைய ஒழுங்கைதிருத்தத்துக்கு 2லட்சத்து 6ஆயிரத்து 700 ரூபாவும்.அலுவலக உபகரணங்கள் தளபாடங்கள் திருத்தத்துக்குஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போர்ச்சூழலால் ஏற்பட்ட கட்டிட இடிபாடுகள்,வீதிகளிலுள்ள பற்றைகளை வெட்டித்துப்புரவாக்கும் பணியில்தற்காலிக ஊழியர்களை நியமித்தும்,உழவு இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்தியதற்கும் இதுவரை சபை நிதிமூலம் 4 லட்சத்து 19ஆயிரத்து 88ரூபா சதம் 76ம் செலவுசெய்யப்பட்டுள்ளது என சபையின் தலைவர் பெனடிக்ற் தனபாலசிங்கம் தெரிவித்தார். (உ-77)

## இராசி பலன்

9-8-2002

(ஆடி 24,வெள்ளி)
பிரதமை மு இ 11 23 வரை
ஆயிலியம் பி ப.3.19 வரை
ராகுகாலம் 10. 34-12.04
நல்லநேரம் 6. 04-7.34

**மேடம்**

மாணவர் கல்விச்சிறப்பு, தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், வாகனபயம்.

**இடபம்**

காரிய நன்மை, தொழில் சிறப்பு,பிரயாணம், இலட்சுமிகரம்;

**மிதுனம்**

விவாதம், அதிகாரிகள் மனஸ்தாபம்,முயற்சி தாமதம்,வேலைப்பளு

**கடகம்**

மனக்கிலேசம், ஆலய தரிசனம், நல்லமுயற்சி, திடீர் நன்மை.

**சிங்கம்**

அலைச்சல், உறவினர் சந்திப்பு, அபகீர்த்தி, காரிய தாமதம்.

**கன்னி**

நினைத்த காரியம் கைகூடும்,தெய்வ தரிசனம், மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி.

**துலாம்**

நல்ல செய்தி, கீழ்ப்படிவு, கடும் முயற்சி, இடமாற்றம்.

**விருச்சிகம்**

உடல் நலக்குறைவு, வேலைக் கஷ்டம், உறவினர் வருகை, முயற்சிதாமதம்.

**தனுசு**

காரிய தடங்கல், வியாதி, திருடர் பயம், நண்பர்கள் வெறுப்பு.

**மகரம்**

நல்ல வரவேற்பு, விருந்துபசாரம்,ஆலய தரிசனம்,முயற்சி கைகூடும்.

**கும்பம்**

காரிய சித்தி, உடல்நலம், தனவரவு,குடும்பநலம்.

**மீனம்**

வியாபார நன்மை, மனப்பதட்டம்,சொத்துப்பிணக்கு, காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை நாளை

## 3 இலட்சம் பேர் தோற்றுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நாளை சனிக்கிழமை நாடெங்குமுள்ள 2 ஆயிரத்து 500 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

சுமார் 3 இலட்சம் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதுடன், மேற்பார்வையாளர்களாக 25 ஆயிரம் பேர் கடமையாற்றவுள்ளனர்.

கடந்த ஆண்டு இடம் பெற்ற மேற்படி பரீட்சையில் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் தோற்றியமை குறிப்பிடத்தக்கது. (உ)

# சங்கே முழங்கு

## கொட்டடி சீனிவாசகம்வீதி அவல நிலை நீங்குமா?

வடபகுதியில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நகரின் கொட்டடிப்பகுதியும் ஒன்றாகும். கடந்த ஆண்டு தொடக்கம் பலபகுதிகளும் சீரமைக்கப்பட்டு வந்த போதும் கொட்டடி சீனிவாசகம் வீதி இன்று வரை திருத்தப்படாமல் தேடுவாரற்ற நிலையில் இருக்கிறது.

சீனிவாசகம் வீதி கடந்த இருபது வருடங்களாக எந்தவிதபராமரிப்பும் அற்ற நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இரவுவேளைகளில் இவ்வீதியால் செல்லும் சைக்கிள் பயணிகளும் மோட்டார் சைக்கிள் பயணிகளும் விழுந்து முட்டி மோதிக் காயங்களுடன் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த வீதியில்தான் கொட்டடிச் சனசமூக நிலையமும் இருக்கிறது. சீனிவாசகம் வீதியைத் திருத்தித் தரும்படி 99 ஆம் ஆண்டு தொடக்கம் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டுவருகின்றோம்.

இதேவேளை சனசமூக நிலையத்திற்கு அருகில் மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் சேகரிக்கப்படும் குப்பைகளை இடைத்தங்கலுக்காகக் கொட்டுகிறார்கள். கொட்டப்படும் கழிவுகளில் இறந்த மிருகங்களையும் பறவைகளையும் போட்டு வைக்கிறார்கள்.

சனசமூக நிலையத்தில் பத்திரிகைகள் வாசிப்போரும் வீதியால் போவோரும் மூக்கினைப் பொத்த வேண்டியநிலையும் இருக்கிறது.

இந்த சீனிவாசகம் வீதி திருத்தப்பட வேண்டும். குப்பைபோடும் நிலைமாற்றப்படவேண்டும். இதற்கான வழிவகைகளை மாநகரசபையினர் செய்ய முன்வர வேண்டும்.

நா.கோபாலகிருஷ்ணன்
கொட்டடி

# கரையோர வலய முகாமைத்திட்ட

# செயலமர்வு யாழ். பல்கலையில்

## துறைசார் பிரமுகர்கள் பலர் பங்கேற்பர்

(யாழ்ப்பாணம்)

கரையோர வலய முகாமைத் திட்டம் பற்றிய செயலமர் வொன்று இம் மாதம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடமும் ,மீன்பிடி அபிவிருத்தி மையமும் இணைந்து இச் செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் நடைபெறவிருக்கும் இச் செயலமர்வை உபவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆரம்பித்து வைப்பார்.

பல்கலைக்கழக மீன்பிடி அபிவிருத்தி மைய இணைப்பாளர் கலாநிதி கா .சித்திரவடிவேலு கிழக்குபல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாக முதல்வர் கலாநிதி த ஜெயசிங்கம், கரையோர வலய முகாமைத்திட்ட முகாமையாளர்,கரையோர வலய முகாமைத்திட்டஆலோசகர், விலங்கியல் துறைத் தலைவர் கோ. பரமேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளதுடன் ,செயலமர்வில் கலந்துரையாடலே முக்கிய அம்சமாக அமையும்'

ஏறத்தாழ 50 துறைசார் பிரமுகர்கள் இச் செயலமர்வில் பங்குபற்றவுள்ளனர்.

இதில் பார்வையாளராக பங்குபற்ற விரும்புகிறவர்கள்இம்மாதம்12ஆம்திகதிக்கு முன்யாழ்.பல்கலைக்கழகவிஞ்ஞான பீட அலுவலகத்துடன் அல்லது பல்கலைக் கழக மீன்பிடி அபிவிருத்தி மையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது .

கரையோர வலய முகாமைத்திட்டம், கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தினால் 1997 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது· இத்திட்டம் 4ஆண்டுகளுக்கு ஒரு முறைமறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் அவ்வாறான மறுபரிசீலனையொன்று இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இத்திட்டத்தின் முக்கியமான ஓர் அம்சம்'சிறப்பு பகுதிகள் முகாமைத்துவத்திற்குரிய இடங்களை இனங்காணலாகும்.

செயலமர்வில் பங்குபற்றுவோரின் குடாநாட்டுக் கரையோரப் பகுதிகள் பற்றிய அறிவை மையமாக வைத்தே கலந்துரையாடல் நடைபெறும்.செயலமர்வில் முன்வைக்கப்படும் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு,புதிய இடங்கள் கருத்தொருமைப்பாடு மூலம் இனங்காணப்படும்.

(உ)

## இம் மாத முடிவில் அமெ.பிரதி ராஜாங்க செயலர் இலங்கை வருகை

(கொழும்பு)

அமெரிக்கப் பிரதி ராஜாங்க செயலாளர் றிச்சாட் ஆர்மிரேஜ் இம்மாத முடிவில் உயர்மட்டபபேச்சுக்கள நடத்துவதற்காக இலங்கை வரவுள்ளார்.

இவர் இந்தியா, பாகிஸ்தான் ,யப்பான்,சீனா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார். (உ)

## பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதான இளைஞன் விடுதலை

(கொழும்பு)

1996 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பளையைச்சேர்ந்த அ. நெப்போலியன்(வயது 24) என்ற இளைஞன் கடந்த வெள்ளியன்று பொலநறுவை மஜிஸ்திரேட் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொலநறுவை எல்லைப் புறக்கிராமம் ஒன்றில் புலிகளுக்கு ஆயுதம் மற்றும் உணவு வசதிகளை ஏற்படுத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் இவர்மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

தற்போது சித்த சுவாதீன மற்றுக் காணப்படும் மேற்படி இளைஞர் கடந்த செவ்வாய் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டார்.

இதேவேளை, இவ் இளைஞன் வியாபார நோக்கில் சென்றுகொண்டிருந்தவேளை கிளாலிக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக பெற்றோரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-3-8)

### கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சன சமூக நிலையத்தின் பொன் விழா மற்றும் புதிய கட்டடத் திறப்பு விழா ஆகியவற்றை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும கரபபந்தாட்டச்சுற்றுப் போட்டியின 3 ஆம 1 ஆம் இடத்துக்கான ஆட்டங்கள் இன்று மாலை 6.00 மணிக்கு கழக மைதானததில் நடைபெறவுள்ளன.

3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விககினேஸ்வரா விளையாட்டுக்கழகமும்,

1 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர்வி.கழகமும் மோதவுள்ளன.(ஷ-120)

## செல்வச்சந்நிதி மாமணி நாதமெழுப்பும் விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் நாளை காலை 6. 00 முதல் 7. 30 மணிவரையுள்ள சுபவேளையில்புதிதாக உருவாக்கப்பட்ட மாமணி ஒலித்து வைக்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.

இந்நாதஒலி எழுப்பும் விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள், நல்லை ஆதீனமுதல்வர்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்யசுவாமிகள்சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவர் ஆகியோர் உட்படஅரசியல்பிரமுகர்கள், சமயப்பெரியார்கள்பல்கலைக் கழக விரிவுரையாளர் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்

1986 ஆம் ஆண்டு இடம் பெற்ற அனர்த்தங்களால் இவ் ஆலய மணி அழிக்கப்பட்டமை தெரிந்ததே.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களால் மீண்டும் லண்டன் மாநகரில் மாமணி உருவாக்கப்பட்டு கோபுரத்தில் ஏற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஷ)

## பொ.ஐ.மு. வின் கூற்றை டிரோன் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியால் மட்டுமே பாராளுமன்றத்தை கலைக்க முடியும்என்றுபொ.ஐ.மு.கூறியிருப்பதை மறுத்த டிரோன் பெர்னாண்டோ எமது அரசியலமைப்புச் சட்டம தேர்தலில் இருந்து 1 வருடத்தினுள் பாராளுமன்றம் தன்னை தானே கலைத்து கொள்ளும் ஏற்பாடுகளை கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி அரசுடன் ஒத்துழைக்க மறுத்தால் தாம் பாராளுமன்றத்தை கலைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்ததுடன் கலைப்புத் தான் முடிவல்ல. பிரதமர் ஜனாதிபதியுடன்சந்தித்து பேசியபின் வேறுபாடுகள் தீருமா என்பதையும் பார்க்க வேண்டும் என்றும் தேவையற்ற தேர்தலைத் தவிர்க்க ஜனாதிபதி முயலவேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுடன் ஒத்துழைக்க வேண்டும். சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும் இது தவறின் தேர்தலுக்கு முகங்கொடுப்பதன் மூலம் ஐந்தில் இரண்டு பெரும்பான்மையை பெறும் வாய்ப்புகள் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தைப் பிரதமர் கலைக்கமுடியாது அது ஜனாதிபதியின் தீர்மானம் என்று சரத் அமுனுகம தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வீட்டுத் திட்டத்தில் இருந்து படையினரை வெளியேற்ற ஊருண்டி மக்கள்கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு ஊருண்டி பகுதியில் உள்ள பத்து வீட்டுத்திட்டத்தில் இருந்து கடற் படையினரை வெளியேற்ற உதவுமாறு சம்பந்தப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு வினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 90 ம் ஆண்டில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் தங்களைச் சொந்த இடத்தில் மீளக் குடியமருவதற்கு உதவுமாறும், தங்களுடைய வீடுகளில் கடற் படையினர் முகாமமைத்துள்ளதனால் தாம் மீளக் குடியமர முடியாமல் உறவினரது வீடுகளில் தங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதையடுத்து அண்மையில் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி பருத்தியடைப்பு ஊருண்டி பத்து வீட்டுத் திட்டத்தினை சென்று பார்வையிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-75)

### ஓய்வு பெற்றார்

(தென்மராட்சி)

தென்மராட்சிக்கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இலங்கையர் கணேசன் இம் மாதம் 6 ஆம் திகதி முதல் தமது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். (உ-77)

## வாடகை அறவீடு குறித்து வணிகர் கழகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தைகளுக்கான வாடகை அறவீடு மற்றும் கடைகளின் உரிமை மாற்றம் ஆகியன தொடர்பான கலந்துரையாடல்ஒன்றுநேற்று முன்தினம் யாழ்.வணிகர்கழகத்தில்இடம்பெற்றது.

யாழ்'வணிகர் கழகத் தலைவர் இ விஜயசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் யாழ். மாநகர முதல்வர் எஸ்.கந்தையன்,யாழ்.மாநகர ஆணையாளர் இ இராமலிங்கம்,மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள்,வணிகர் கழகஉறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-6)

## காரைநகரில் புலிகளின் பணிமனை

(காரைநகர்)

காரைநகரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

காரைநகர் புதுறோட் மில் வீதியில்அமையவிருக்கும்இந்த அரசியல் பணிமனைத் திறப்பு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரமுகர்கள பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஷ-246,43)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலைஸ்ரீகலைமகள்சன சமூக நிலையப் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும் நிலையத்தின் 56 வது ஆண்டு விழாவும் நாளைசனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு, நிலைய முத்தமிழ்கலைஅரங்க முன்றலில் தலைவர் சி. சிவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர்செம்பியன் செல்வி மலர் சின்னையா கலந்து கொள்ளவுள்ளார்.

(உ)

### தமிழக அரசு

# ஈழத் தமிழரின் விடுதலைப் போரை கொச்சைப்படுத்த முனைகிறது

## பேரணி முடிவில் சுரேஸ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

தமிழக அரசு ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதையோ அல்லது அதை மூலதனமாக்கி சுயஇலாபம் தேட முனைவதையோ எம்மால் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.'

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியகூட்டமைப்புப் பிரமுகரும்ஈ.பி.ஆர் .எல்.எவ் சுரேஸ் அணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோ. மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் ஆகியோரைத் தமிழக அரசு கைதுசெய்தமையைக் கண்டித்தும் அவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் நேற்றுமுன்தினம் யாழ் நகரில் வலி.தென்கிழக்கு பொதுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்டனப் பேரணியின் முடிவில் யாழ். மத்திய பஸ்நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேற்படி ஒன்றியத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இலங்கைத் தமிழ்.மக்களின் பிரச்சினையை சொந்த இலாபங்களுக்காக பயன்படுத்த முயற்சித்ததன் விளைவே வை.கோ.வினதும் பழ. நெடுமாறனதும் கைதுச் சம்பவங்களாகும்.

இன்று இலங்கையில் ஒரு சமாதானச் சூழல் தோன்றியுள்ளது.நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடனும் இந்திய மத்திய அரசின் பூரண ஆசியுடனும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் விரைவில் நடைபெறவுள்ளன.

இந்த நேரத்தில் பல்வேறு விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்த தமிழகம் எமக்காக குரல் கொடுத்தவர்களைச் சிறையில் அடைத்தமை மிகவும் கேவலமானது· எமது விடுதலைக்காகத் தமிழக மக்கள் அனைவரும் எம் பின்னால் அணி திரண்டு ஆதரவு தெரிவிக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும் என்றார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் சொலமன் சூ.சிறிலும் உரையாற்றினார். (ஷ-6)

# இன்று ஒரு தகவல்

## சுத்தநீரும் நல்லுணவும்

எமது உடல் வளர்ச்சிக்குச் சுத்தமான நீரைப் பருகுதலும், நல்லுணவை உண்ணுதலும் அவசியம். பானத்திற் கேற்ற நீர் பற்றிக் கவனமாக இருத்தல் முக்கியம். கொதிக்கவைத்து ஆறிய நீரும், வடிகட்டிய நீரும் உகந்தவை. உயர் மலையிலிருந்து வடிந்து வரும் அருவிநீர் இயற்கையாகவே சுத்தமானது. பனிக் கட்டிபோட்ட அதிகங் குளிர்ந்த நீர் உப்புநீர், கந்தகச் சத்துள்ள நீர் போல்வன பானத்திற் கேற்றவையல்ல. பேதி, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் முதலிய நோய்கள் நீர் மூலம் பரவுவதால் வடிகட்டியோ. கொதிக்கவைத்தோ சுத்தி செய்து பருக வேண்டும். சுத்த நீரிற் குளிப்பதால் உடலின் வெளிப்புற அழுக்கும், சுத்த நீரைப் பருகுவதால் உடலின் உட்புற அழுக்கும் நீங்குகின்றன.

ஒரு இயந்திர இயக்கத்துக்கு எண்ணெய், சரிபோல்வன எவ்வளவு முக்கியமோ அவ்வாறு நமது உடம்பாகிய இயந்திரம் இயங்குவதற்கு உணவு வேண்டப்படுகிறது. உடல் உறுதிக்கும் வளர்ச்சிக்கும் உடம்பை உஷ்ணமாக வைத்திருப்பதற்கும் சுத்தமானதான நல்லுணவு அவசியமாகின்றது. நோய்களிற் பாதிக்குமேல் உணவுகாரணமாக வருகின்றன. வாய்க்கு இனிப்பானது உடம்புக்கு இனிப்பாகாது. ஐஸ்கிறீம் போன்ற வற்றையும், தெருவோரங்களில் விற்கும் பலபண்டங்களையும், வாங்கியுண்பது அதிகமான பிள்ளைகளிடம் காணப்படும் ஒரு கெட்ட பழக்கமாகும். நல்லுணவை அளவோடு குறித்த நேரம் உண்ண வேண்டும். பழுதடைந்த உணவு, அழுகியபழங்கள், ஈமொய்த்தபண்டங்கள் போன்றனவற்றையும், உடலுக்கொவ்வாத உணவுகளையும் மிதமிஞ்சிய உணவையும் உண்பதுநோயை வாவென்றழைப்பதாகும். 'நோய்க்கிடங்கொடேல்' என்னும் முதுமொழியை அனுசரித்துச் சத்துள்ள உணவுகளைக் காலங் குறித்துண்டு எல்லோரும் வாழவேண்டும்.

நல்லுணவென்பது சமநிலை பொருந்திய உணவாகும், இது மாச்சத்து (சர்க்கரை), புரதம் (ஊன்சத்து கொழுப்புஅல்லது நெய்ச்சத்து, முக்கிய சீவசத்துக்கள். (விற்றமின்ஸ்), உலோகச் சத்துக்கள் ஆகியவை அளவுப்படி அமைந்த உணவாகும். மாச்சத்து அரிசி, கோதுமை முதலியவற்றிலும், கிழங்கு வகைகளிலும் உண்டு. புரதம், பால், மீன், முட்டை, இறைச்சி, பருப்பு என்பவற்றில் உண்டு. கொழுப்பு எண்ணெய், வெண்ணெய், நெய், மீன், இறைச்சி முதலியவற்றிலும் உலோகச்சத்து முளைக்கீரை. வல்லாரை, பொன்னாங்காணி முதலிய கீரை வகைகளிலும், பால், சிறுமீன் வகைகளிலும் உண்டு.

மாச்சத்து உடலுக்கு உஷ்ணத்தையும, சக்தியையும், புரதம் உடல் வளர்ச்சியையும் உடற்பாதுகாப்பையும், கொழுப்புஉடலுக்கு உஷ்ணத்தையும் சருமப் பாதுகாப்பையும், உலோகச் சத்து பல், எலும்பு என்பவற்றின் வளர்ச்சியையும் திடகாத்திரத்தையும் அளிக்கின்றன.

சீவசத்து 'ஏ' உடல் வளர்ச்சியையும், கண் பாதுகாப்பையும், சீவசத்து 'பி' நரம்புகளின் பாதுகாப்பையும், சீவசத்து 'சீ' கண், தோல் என்பவற்றின் பாதுகாப்பையும், சீவசத்து 'டீ' எலும்புக்கு உறுதியையும் அளிக்கின்றது. இங்கு கூறப்பட்ட சீவ சத்துக்களில் "ஏ" நெய், பசளி, முளைக்கீரை, பப்பாசி, கரட் கிழங்கு, முட்டையின் மஞ்சள் கரு முதலியவற்றிலும்; பி. தவிடு நீக்காத கைக்குத்தரிசி, மோர், கீரை வகை, பால், பருப்பு வகை முதலிய வற்றிலும், 'சீ' எலுமிச்சை, தோடை, பப்பாசி, தக்காளி முதலிய பழ வகைகளிலும் நெல்லிக்காய், முருங்கையிலை, முளைக் கீரை முதலிய வற்றிலும், 'டீ' மீன் எண்ணெய், நெய், முட்டை, பால், சூரியகிரணம் முதலியவற்றிலும் உண்டு.

சீவசத்து 'ஏ' குறைவதால் உடல் வளர்ச்சிக் குறைவு, கரப்பன், மாலைக் கண் முதலிய நோய்களும், 'பி' குறைவதால் பெரிபெரி என்னும் நரம்புத் தளர்ச்சி நோய், வாய்ப்புண், பசியின்மை முதலிய நோய்களும் 'சீ' குறைவதால், சொறி, சிரங்கு, பல் ஈறு கரைதல், மயிர் உதிர்தல், சிறுபிள்ளைகளுக்குப் மூட்டுக்களில் வலி ஏற்படல் என்பனவும், 'டீ' குறைவதால் வளர்ச்சி குன்றல், கணைநோய், சர்ப்பிணிகளுக்கு உடல்வெளிறல்போன்றனவும் ஏற்படும்.

வே. சிவக்கொழுந்து

# காரைநகரில் கடற் படையினர் மீளத் தடைகளை போடுகின்றனர்

## மீளக் குடியமர்ந்த மக்கள் அச்சம்

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காடு கடற்கரை வீதியில் கடற்படையினர் புதிய தடைகளைப் போட்டுள்ளனர்.

அதனால் தடையைக் கடந்து செல்வதற்கு அப்பகுதி மக்கள அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

12 வருடங்களிற்குப் பின்னர் இப்பகுதி மக்கள் கடந்த இரு மாதங்களாக மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து, காரைநகர் கடற்படையினர் தமது காவலரண்களையும், வீதித் தடைகளையும் நீக்கி மக்களை மீளக்குடியமர அனுமதித்தனர்.

ஆனால் கடந்த வாரம் முதல் மீண்டும் வீதித்தடை போடப்பட்டு, காவலரண்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இப்பகுதி கடற்பகுதியில் மீன்பிடிக்க தடை விதித்துள்ளதோடு இதனை அண்டிய பிரதேசத்தில் கடற்றொழில் செய்வதற்கு நேரக் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட நடவடிக்கை தொடர்பாக காரைநகர் தோப்புக்காடு கிராம முன்னேற்றச் சங்கம், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யவுள்ளது. (உ-246)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் மு.ப.10.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள காங்கிரஸ் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## தொடருறு கல்விச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான தொடருறுகல்விச்செயலமர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

பலதரக் கற்பித்தல் செயலமர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும்,

கணித பாடச் செயலமர்வு 14 ஆம் திகதி புதன்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும்,

விஞ்ஞான, சமூகக்கல்வி பாடங்களின் செயலமர்வு 14 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

ஆங்கில பாடச் செயலமர்வு 15 ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்,

நேர முகாமைத்துவச் செயலமர்வு 15 ஆம் திகதி வியாழக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும்,

தமிழ்ப் பாடச் செயலமர்வு 17 ஆம் திகதி சனிக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (உ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும்போது எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு இன்று மு.ப. 10.30. மணிக்கு வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-6)

## முடி அலங்கார பயிற்சி வகுப்பு

(கோப்பாய்)

யாழ். கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினால், இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு, பெண்களுக்கான முடி அலங்கார பயிற்சி வகுப்பு கோப்பாய் தெற்கு றோ. க. த. க. பாடசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பெண்கள் இணைந்து கொள்ள முடியுமென்று பாடசாலைஅதிபர் திருமதி ந. ரவீந்திரநாதன் அறிவித்துள்ளார். (இ)

## முன்பள்ளி மேம்பாட்டு பேரவை அமைக்க ஏற்பாடு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டிலுள்ள முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து ஒரே சீரான கல்விப் போதனையையும் செயல்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக முன்பள்ளி மேம்பாட்டுப் பேரவை ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக அறியப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் குடாநாட்டில் தற்போது இயங்கி வரும் சுமார் 600 முன்பள்ளிகளையும், அவற்றின் ஆசிரியைகளையும் இணைத்துச் செயற்படுத்தப்படும் எனவும் தெரியவந்துள்ளது. (உ-77)

## இலங்கை தேசிய சதுரங்க சம்பியன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தேசிய சதுரங்கச் சம்பியன் பட்டத்திற்காக இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் மூன்று போட்டிகள் கடந்த யூலை இறுதி வாரத்தில் கொழும்பில் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் முதற் போட்டியான பெரும் போட்டியில் (Major Tourna ment) யாழ். மாவட்டத்திலிருந்து ஆறு வீரர்கள் பங்கு பற்றினர்:

தி. இராஜசிங்கம், நா. சோதிநாதன், ச. சத்தியேந்திரா, வி. உதயகுமாரன் வி. ரி. எஸ். வித்தியாதரன், வி. ரி. எஸ். சிவோதயன் ஆகியோரே அங்கு நடைபெற்ற மொத்தம் 9 சுற்றுகளில் பங்குபற்றினர்.

இப் போட்டிகளில் இலங்கையின் முன்னணி வீரர்கள் பலர் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஷ)

## தெல்லிப்பழை துர்க்கா உற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான மகோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது;

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ள மகோற்சவ காலத்தில் 18 ஆம் திகதி வேட்டைத்திரு விழாவும் 19 ஆம் திகதி சப்பரதிருவிழாவும் 20 ஆம் திகதிதேர்த்திருவிழாவும் 21-ம் திகதிதீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஷ)

## மடகஸ்கார் சென்றுதிரும்பும் மாணிக்க வியாபாரிகள்மீது மருத்துவப் பரிசோதனை

(கொழும்பு)

மடகஸ்காரில் புதுவித வைரஸ் நோய் ஒன்று அண்மைக் காலங்களில் வேகமாகப் பரவி வருவதையடுத்து, அங்கு சென்று திரும்பிய மாணிக்கக்கல் வியாபாரிகள் மீது விசேட மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறுசப்ரகமுவ மாகாண முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து 5 ஆயிரத்திற்கும் அதிகம் பேர் மாணிக்கக்கல் வியாபாரத்திற்காக மடகஸ்காரில் தங்கியுள்ளனர்.

இவர்கள் 3 - 6 மாதங்கள் அங்கு தங்கிஇருந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் நாடு திரும்புகின்றனர்.

இதேவேளை, மேற்படி வைரஸ் நோய் காரணமாக மடகஸ்காரில் இதுவரை 160 பேர் உயிரிழந்துள்ளனர். (உ)

## அதிகாரப் போட்டியால் தளம்பல் நிலைமையில் இலங்கைப் பொருளாதாரம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிதலைமையிலான பாராளுமன்றத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரத்போட்டிகளினால் ஆட்சியில் உறுதியற்ற நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து மீண்டும் பொருளாதாரத் தளம்பல் ஏற்பட்டுள்ளதாக பொருளியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றம் கலைக்கப்படும் மீண்டும் ஒரு தேர்தல் நடத்தப்படும் என்றசந்தேகங்கள் நிலவி வருவதால் உள்நாட்டு, வெளி நாட்டுமுதலீடுகள் குறைக்கப்பட்டு பொருளாதாரம்தளம்பல் நிலைக்குதள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## மீன்பிடி உபகரண விற்பனை நிலையம்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு புனிததொம்மையப்பர்கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினால் மீன்பிடி உபகரணவிற்பனை நிலையம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்க அங்கத்தவர்களுக்கு குறைந்த விலையில் மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்வதற்காக இந் நிலையத்தினைக் குறிப்பிட்ட சங்கம் திறந்துள்ளது. (உ-75)

## நித்திரையில் இருந்த சிறுவனை மிதித்துக் கொன்ற யானை

(கொழும்பு)

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சிறுவனை, வெளியே இழுத்துச் வந்த யானை சிறுவனின் தலையை மிதித்துக் கொன்றது.

கொக்கிராவைப் பொலிஸ் பகுதியில் அண்மையில் இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்திரபால (வயது 14) என்ற சிறுவனே இவ்வாறு மரணமானான். (உ)

# காவலர்களைத் தாக்கி விட்டு கைதிகள் 7 பேர் தப்பியோட்டம்

### புத்தளம் சிறைச்சாலையில் புதனன்று சம்பவம்

(புத்தளம்)

புத்தளம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த 7 கைதிகள்நேற்று முன் தினம் இரவு தப்பிச்சென்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கு ஏற்பட்ட குழப்ப நிலை ஒன்றைத்தொடர்ந்து' 9 கைதிகளை அதிகாரிகள் அப்புறப்படுத்த முயன்ற சமயம் சிறைச்சாலை அதிகாரிகளைத் தாக்கி விட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த அதிகாரிகள் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டின் பேரில் தடுந்து வைக்கப்பட்டிருந்த மேற்படிகைதிகளைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளதுடன். இதற்கென விசேட புலனாய்வுக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. இதேவேளை புத்தளம்சிறைச்சாலையில் சிறைக் காவலர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும்30 கைதிகளுக்குக்காவல்புரிய 4 சிறைக்காவலர்கள் மாத்திரமே தற்போது பணியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## மாத்தளை நகரில் மானத் தமிழுக்கு ஈனம்

(கொழும்பு)

''புகிறங்கமான இடுங்களில் முதபானம் ஆருந்துவது நுற் பிரசைகளின் சுதந்திரத்தைப் புரிப்பதாகும்.''

என்ன! இது, பண்டைய தமிழ் மன்னர் காலத்து கல்வெட்டு வாசகம் என்று யோசிக்கிறீர்களா?

தமிழ் பேசும் முஸ்லிம் ஒருவர் மாநகர முதல்வராக பதவி வகிக்கும் மாத்தளை நகரின் சேந்திர இடத்தில் அமைந்துள்ள மில்லேனியம் பூங்கா, வி.ரி. நாணயக்கார பூங்கா போன்ற இடங்களில் அண்மையில் நாட்டப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளில் காணப்படும் தமிழ்க் கொலைகள் இவை.

உலக சுகாதார அமைப்பின் அனுசரணையுடன் மாத்தளை மாநகர சபையால் இவை அமைக்கப்பட்டுள்ளன.

செந்தமிழ், செழுந்தமிழ் என்றெல்லாம் போற்றப்படும் உயிரனைய தமிழுக்கு நடந்துள்ள இந்த அநியாயம் குறித்து தமிழ் நெஞ்சங்கள் மிகுந்த அதிருப்தி வெளியிட்டு வருகின்றன (உ)

## மடுத் தேவாலய சூழலில் 300 வீடுகள் புனரமைப்பு

(மன்னார்)

மடுத் தேவாலயச் சூழலில் உள்ள 300 வீடுகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மடுத் தேவாலய உற்சவத்தை ஒட்டி பெருமளவு பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் இப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்தமுதல் கட்டநிர்மாணிப் புப் பணிகளுக்காக 20 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் நீர் விநியோகம் மற்றும் பொதுவசதிகளை அப்பகுதியில் அதிகரிக்கவும்நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது.

அமைச்சர்களான ஜேன் அமரதுங்க, ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் இந்த நடவடிக்கைகளுக்கு காலாய் இருப்பது குறிப்பிடத் தக்கது. (உ)

## வடமராட்சிப் பகுதிக்கு செப்ரெம்பர் முதல் 24 மணிநேர மின் வழங்கல்

(மந்திகை)

வடமராட்சியில் இது வரை மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு 24 மணி நேர மின்சாரம செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் வழங்கப்படுமென மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மினசாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த மினனிணைப்பு, மற்றும் புதிய இடங்களுக்கு மின்சாரம் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் நிதி நெருக்கடி காரணமாக இடை நிறுத்தப் பட்டிருந்தன.

இதனால் பருத்தித்துறை, கரவெட்டி பகுதிகளில் சில இடங்களுக்கு மின்சாரம் வழங்க முடியாத நிலைக்கு மினசார சபை தளளப்பட்டிருந்தது.

தற்போது மின் இணைப்பு வேலைகளுக்கெனநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது.

அந்நிதிகிடைத்தவுடன்மின் இணைப்புக்கள் வழங்கப் பட்டு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோர், மற்றும் தமது மின்சாரத்தினை அயல் வீட்டாருக்கு வழங்குவோர் ஆகியோரைப்பிடிப்பதற்கு பொலிஸார் எம்முடன் இணைந்து செயற்பட முன் வந்துளளனர். இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதனூடாக மின்சார வீண் விரயத்தினை ஓரளவு தடுக்க முடியும் எனவும்அவர் மேலும் தெரிவித்தார். (ஷ-23)

## தம்பாட்டி விளையாட்டுக்கழகத்திற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

(ஊர்காவற்றுறை)

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகத்தின செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுளளது. கடந்தமார்ச் மாதம் இடம் பெற்ற ஊர்காவற்றுறைப் பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டியில் வீரர்கள் விதிமுறைகளுக்கு மாறாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றத்திற்காக ஊர்காவற்றுறைப் பிரதேச விளையாட்டுப் பேரவை 2 வருடங்களுக்கு தடைசெய்திருந்தது.

மேற்படி தடைகாரணமாக விளையாட்டுச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், விளையாட்டு வீரர்களின்எதிர்காலமும் பாதிக்கப்படுவதாகத் தம்பாட்டி கிராமத்திலுள்ள பொதுஅமைப்புக்கள் மற்றும் பிரான்ஸ் நாட்டிலுள்ள தம்பாட்டி அபிவிருத்திச் சங்கம் என்பன ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்குச் சுட்டிக்காட்டியதை அடுத்தே தடைநீக்கப் பட்டுள்ளது.

தடைநீக்கப்பட்டுள்ளதாக அண்மையில் தம்பாட்டியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில்ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் நடத்தும் சுற்றுப்போட்டிகள் இம்மாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது(உ-75)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை. எம். சி, ஏயினால் நடத்தப்படவுள்ள உள்ளரங்க விளையாட்டுக்களுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 12 ஆம் திகதி திங்கள்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் 1? ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில்பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

## விமர்சன அரங்கு

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கலை இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்பட்ட இலட்சுமணனின் கவிதைத் தொகுப்பிற்கான விமர்சன அரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெறும் இவ் விமர்சன அரங்கில் கவிஞர் சோ. பத்மநாதன் விமர்சனம் நிகழ்த்துவார். (உ-59)

## படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தென்னை மரத்தில் ஓலை வெட்டுவதற்காக ஏறிய போது, தென்னை மரம் முறிந்து விழுந்ததில் படுகாயமடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி விஜயராஜ் (வயது 26) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். (த-6)

## தனயன் தாக்கி தந்தை தலையில் படுகாயம்

(மந்திகை)

குடும்பத்தைக் கவனிக்காது குடிப்பழககத்திற்கு அடிமையானமகனைத்திருத்தமுயன்ற தந்தை தனயனால் தாக்குண்ட சம்பவம் வரணிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

6 பிள்ளைகளின் தந்தையான தனது மகனின் நடத்தையில் அதிருப்தியுற்ற 78 வயதுவயோதிபரானதந்தை சம்பவதினத்தன்று மகனைத் திருத்தும் வகையில் புத்திமதிகள்கூறியதாகவும்,

மது போதையில்வந்த மகன் அருகில் இருந்த பொல்லாங் கட்டையால் தந்தையின் தலையில் ஓங்கிப் பலமுறை அடித்ததாகவும் தெரியவருகிறது.

பாதிக்கப்பட்ட வயோதிபர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (உ-23)

### தொழிலுக்கு இடையூறாக உள்ள

## பாறைகளை அகற்றுமாறு மீனவர்கள் கோரிக்கை

(மந்திகை)

கரையோரப்பகுதியில்கடந்த 20 வருடங்களாக அகற்றப்படாதுள்ளபாறைகளைஅகற்றி கடற்றொழிலாளர்கள் இடையூறின்றித்தொழிலில்ஈடுபடுவதற்கு உதவுமாறு வடமராட்சி கடற்றொழிலாளர்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கரையோரப்பகுதியில் நீண்டகாலமாக பாறைகள் அகற்றப்படாமையினால் மீன்பிடித் துறைகளிலிருந்து கடலுக்கு நுழையும் வாயில்களில் அவை அடர்ந்து விளைந்துள்ளன.

இதனால்தொழிலுக்குசெல்லும் பெறுமதிவாய்ந்த வள்ளங்கள்சேதப்படுத்தப்படுவதுடன், உயிர் ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பாறைகளை டோசர்களால் அகற்றுவதற்கு உதவுமாறு கோரப்பட்டுள்ளது. (ஷ-23)

## ஆட்களை கடத்துவோர்க்கு ஆஸி. கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து குடியேற்றவாசிகளைக் கடத்திச் செல்பவர்களுக்கு அவுஸ்திரேலியா கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அண்மையில் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில்,

ஆட்களைக் கடத்தும் 4 இலங்கையர்களைச் சிறையில் அடைத்ததன் மூலம் இவ்வாறான பயங்கரமானதும் சட்ட விரோதமானதுமான செயல்களுக்குஎதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய வடமேற்கு எல்லையில் கடந்த வருடம் ஒட்டைப் படகொன்றில் 65 சட்ட விரோதக் குடியேற்றவாசிகளைக் கொண்டுவந்து சேர்த்ததற்காக 4 இலங்கையர்களுக்கு பேர்த் நீதிமன்றம் 5 வருடத்திற்கு மேற்பட்ட சிறைத் தண்டனையை வழங்கியது.

இவ் வருட முற்பகுதியில் இருந்து இலங்கையில் யுத்தம் இடம்பெறாத பகுதிகளில் இருந்து ஆட்களைக் கடத்தி வரும் செயல்கள் அதிகம் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஜனவரியில் 250 பேரை ஏற்றி வந்த 3 ட்ரோலர் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (உ)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் தேர்வாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர் வரும் திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு நல்லூர் சாதனா சி. சி. த. க பாடசாலையில், சங்கீத சபைத் தலைவர் எஸ். மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேர்வாளர்களாக கடமை புரிய சம்மதம் தெரிவித்தவர்களைத்தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ-5)

## படைவீரர் தற்கொலை

(கொழும்பு)

இராணுவ வீரர் ஒருவர் கிரனேடை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

மாத்தளை மஹவெல பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கடந்த திங்களன்று நடந்த இந்தச் சம்பவத்தில் மடவளையைச் சேர்ந்த என். சோமதாஸ என்பவரே மரணமடைந்தவராவார்.

ஓமந்தை இராணுவ முகாமில் கடமையாற்றிய மேற்படி படைவீரர், குடும்பப் பிரச்சினை காரணமாக இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (உ)

### யுத்தநிறுத்த மீறல் குறித்த

# முறைப்பாட்டு அறிக்கை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பேன்

### பிரதமர் ரணில் உறுதியாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவுக்குகிடைத்த முறைபாட்டு அறிக்கையை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது, இவ்வாறான கூட்டு அறிக்கையை உடன் சமர்ப்பிப்பது நடைமுறைச் சாத்தியமில்லை என்ற தொனிப்பட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் ரத்னாயக்கா தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்ட உறுதிமொழியை பிரதமர் வழங்கினார்,

அத்துடன் உண்மையை மறைக்கும் நோக்கம் அரசுக்கோ அல்லது அவதானிப்புக் குழுவுக்கோகிடையாது என்பதையும் வலியுறுத்தினார்.

பாராளுமன்ற நூலகத்தில் யுத்த நிறுத்த மீறல் குறித்து முறைப்பாடுகள் பற்றிய விரிவான அறிக்கையை வைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரொனிடி மெல் கேட்டபோது.

கண்காணிப்புக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் எதிர்வரும்செவ்வாய்க்கிழமை இதுபற்றி அறியத் தருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (உ)

செய்வினை செய்வான்செயல் முறை அவ்வினை உள்ளறிவான் உள்ளம்கொளல் — குறள்

# வலம்புரி

## முன் ஏற்பாடு அவசியம்

நல்லூர் முருகன் மகோற்சவம் 13ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நல்லூர் முருகன் ஆலயத்திற்கு மக்கள் கூட்டம் திரள்வது வழமை எனினும் இம்முறை நல்லூர்த்திருவிழாவில்இலட்சக்கணக்கான மக்கள் கூடுவர் என்பது தெளிவு.

ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டதையடுத்து, உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் முருகனடியார்கள் வந்து குவிவர், இதுதவிர இப்போது உல்லாசப் பயணத்தின் உறைவிடமாக இருக்கின்றயாழ்ப்பாணத்திற்கு தென்னிலங்கைச் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் ஆயிரக்கணக்கில் வந்தவண்ணமுள்ளனர். இந்நிலையில் உல்லாசப் பயணத்தை மேற்கொண்டு வருபவர்களின் எண்ணிக்கையும், நல்லூர்மகோற்சவத்தில் அதிகரிக்குமென்பது எதிர் பார்க்கப்பட வேண்டிய தொன்றாகும்.

இத்தகைய நிலையில் கடந்த சில வருடங்களாக நல்லூர் வீதியில் நடந்தேறும் வாள் வெட்டுக்களும், சினிமாப்பட எடுப்புகளும்,இம்முறையும் நடப்பதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு.


இத்தகைய கலாசாரச் சீரழிவுகள் கடந்தவருடங்களில் யாழ்ப்பாணத்து எல்லைக்குள் அமுக்கப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை அத்தகைய நிலைமை மாறிவிட்டது. வெளியாரின்வரவுகள்இம்முறை அதிகமாக இருக்குமென்பதால் யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தை மதிப்பிடு செய்வதில் பலர் ஈடுபடுவர் என்பதும், அதன் விளைவுகள் குடாநாட்டிற்குவெளியே ஏன் நாட்டின் அரசியல் எல்லைக்கு அப்பாலும் எடுத்துச்செல்லப்படும்.

எனவே நடைபெறஇருக்கும் நல்லூர் உற்சவகாலத்தில் இளைஞர்களின் அத்துமீறியசெயல்களைக் கட்டுப்படுத்துவதில் ஒவ்வொரு பெற்றோரும் விழிப்புடன்இருப்பதுடன் யாழ் - மாநகரசபை, மற்றும்பொதுஸ்தாபனங்கள் தொண்டர் அமைப்புகள் மிகவும் கண்காணிப்புடன் செயற்படுவதும் அவசியமாகும். தவறும் பட்சத்தில் வரலாற்றில் அழிக்க முடியாத கலாசாரபிழைவுகளை காணவேண்டிய சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# உலக மாதாவின் உண்மை அன்பைப் பெற்றவர்

# இறையருள் இன்பத்தைப் பெறுவது திண்ணம்

## வெள்ளி நற்சிந்தனை



எனது தாய், யார் அகில உலகங்களுக்குந் தாயாக இருப்பவளே எனது தாய், அவளே இந்த உலகைப் படைத்து நிலைத்திருக்கச் செய்கிறாள். அவளே எப்போதும் தன்னுடைய குழந்தைகளைக் காப்பாற்றுகிறாள். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிறாள். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப வழங்குகிறாள். நல்ல மகன் தாயை விட்டுப் பிரிந்திருக்க மாட்டான். எல்லாம் தாய்க்குத் தெரியும்,குழந்தைஉண்டு உடுத்து மகிழ்ச்சியடைகிறது. உலக விஷயங்களைப் பற்றி அது சிறிதும்கவலைப்படுவதேயில்லை. இந்த உலகின் ஜகன் மாதா பல உருவங்களையும் பெயர்களையும் தாங்கி லீலை புரிகிறாள்.

### நீலமேக சியாமள வடிவம்

ஒருசமயம் அவள் அகண்ட நிர்க்குணப் பிரம்மமாகவும், மற்றொரு சமயம்நித்தியகாளியாகவும், விளங்குகிறாள். ஒரு நிலையில் சுடுகாட்டுக்கு அதிபதியான பயங்கர உருவங் கொண்ட மயான காளியாகவும் மற்றொரு நிலையில் நம்மையெல்லாம்காத்தருளும் ரட்சா காளியாகவும் அவள் திகழ்கிறாள். வேறு ஒருநிலையில் அனைத்து அண்டங்களுக்கும் நாயகனாகிய சிவனுக்குப் பிரியமானவளாகவும், பக்தர்களின் கண்களுக்கு மகிழ்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுக்கும் நீலமேக சியாமளாவாகவும் தோன்றுகிறாள்.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை எதுவும் இல்லாமல் எங்கும் ஆழ்ந்த இருள் மூடியிருக்கும் போது என் ஜகன் மாதா மட்டுமே உருவமற்றவளாகஇருந்தாள். நமது வீடுகளில் பூஜிக்கப்படும் அன்னையின் நீலமேக சியாமள உருவம் மக்களால் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியவடிவம், அந்த உருவத்தில் அவள் பக்தர்களின் விருப்பங்களை அறிந்து அவர்கள் விரும்புவதையெல்லாம் ஏராளமாகக் கொடுத்து, தன்னுடையகுழந்தைகளை, 'பயப்படவேண்டாம்' என்று சொல்லி அருள்பாலித்து அவர்களின் மனதை ஈர்க்கிறாள். இந்துக்கள் தங்கள் வீட்டில் பூஜித்து வரும் தேவி அவள்தான். மேலும் அவள் பஞ்சம், நிலநடுக்கம், வரட்சி, அதிகமழை ஏற்படும் காலங்களில் அவைகளிலிருந்து காக்கும் ஜகத் ரட்சகியாகத் தோன்றுகிறாள்.

### பிரளய காலம்

சுடுகாட்டில் அவள் காலரூபமாக இருக்கின்றாள். காலனின் வடிவத்தில் அங்கு அவள் பிணம், நரி ஆகியவை சூழ இருக்கின்றாள். பெருகும் இரத்த வெள்ளமும், அவள் அணிந்திருக்கும் மண்டையோட்டுமாலையும்,இறந்தவர்களின் கைகளால் செய்த இடைக்கச்சையும் அவளைச் சம்காரகாளி என்று அறிவிக்

## பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர்

கும் அடையாளங்கள். அவள் பிரபஞ்சத்தை எப்படிச்சிருஷ்டிக்கிறாள் என்று பார்! பிரளய காலத்தில் என் அன்னை ஜகன்மாதா. சிருஷ்டிக்கான விதைகளை மிகவும்கவனமாகச் சேமித்து வைக்கிறாள். வீட்டுத் தலைவி ஒருத்தி தன் வீட்டுக்குத்தேவையானவிதை போன்றவற்றை ஒருபானையில் போட்டு வைப்பது போலவே ஜகன் மாதா மீண்டும் பிரபஞ்சத்தைச்சிருஷ்டிப்பதற்கு தேவையான விதைகளைப் பிரளய காலத்தில் எடுத்துவைக்கிறாள்.

ஆதிசக்தியான என்அன்னை இந்த மாறுபடும் உலகில் உள்ளும் புறமும் இருக்கிறாள். அவள் உலகத்தைப் படைத்து அதில் வசிக்கிறாள். அவள் சிலந்தி, இந்த உலகம் முழுவதும் அவளால் நெய்யப்பட்ட வலை. சிலந்தி தன் சரீரத்திலிருந்து வலையைச் செய்து கொண்டு அதில் வாழ்கிறது. என் அம்மை தானே பாத்திரமாகவும்,அதன் உள்ளிருக்கும் பொருளாகவும் இருக்கிறாள். எல்லாவற்றுக்கும் ஆதாரமாயும், ஆதேயமாகவும்இருப்பவள அவளே, ஏன் அவள் நம்மை இப்படி அலையவைக்கிறாள். நாம் இப்படிச்சிறிது அலைய வேண்டும் என்பது அவளது விருப்பம், அதுதான் விந்தையானது. இந்த உலகை அம்பிகை தனது விளையாட்டுக்காக உண்டாக்கி இருப்பது போல் தோன்றுகிறது. இதுவே மகாமாயை. அறிய முடியாதது ஆதலால் ஒருவன், பராசக்தியான எனது திவ்விய மாதாவிடம் அடைக்கலம்புக வேண்டியது அவசியம்.

### இறையருள் பெறல்

அறியாமை என்ற விலங்குகளால் அவன் நம்மைக் கட்டி வைத்திருக்கிறான். அந்த விலங்குகளிலிருந்து விடுபடும் போது தான், நாம் இறைவனின் சாட்சாத்காரம் பெற முடியும். அனைத்துக்கும் மூல காரணமான தெய்வீக அன்னையைஒருவன் மகிழ்ச்சி அடையும்படி செய்ய வேண்டியது அவசியம். அப்போது தான் அவன் இறையருளைப் பெறமுடியும். பராசக்தி அஞ்ஞானம் என்ற வலையை வீசி நமது கண்களை மூடிவிடுகிறாள், அவள் வழிவிட்டால் தான் இறையருள் அனுபவம் என்ற அந்தப் புரத்துக்குள் நாம் நுழையமுடியும். பிரம்மாவைப் போன்ற தேவர்கள் கூட -மதுகைடபன்என்றஅரக்கர்களைக் கொல்வதற்கு-மகாமாயையை (தேவியை) வணங்கினார்கள் என்பதைப் புராணங்களின் மூலம் அறியலாம்.

இந்த உலகம் தோன்றுவதற்குப்பராசக்தியே அடிப்படைக் காரணம். அவள் வித்தியாசக்தி அவித்தியா சக்தி என்ற இரண்டு விதங்களில் செயல் புரிகிறாள். அவித்தியா சக்தி மயக்கத்தைத் தருவது, அது பெண்ணாசை, பொன்னாசை மயமானது, வித்தியா சக்தியானவள் பத்தி, அன்பு, தயை, ஞானம் ஆகியவற்றை ஒருவரிடம் தோற்றுவிக்கிறாள், இவை ஒருவரைஇறைவனிடம் அழைத்துச்செல்லும் இயல்புடையவை.

### அன்னையை பூஜிக்கும் முறை

சாதகன் சக்தியிடம் (தாய்-குழந்தை போன்ற) பலவித உறவுமுறைகளால் அவளை மகிழ்விக்க முயற்சி செய்கிறான், தன்னை அம்பிகையின் தோழியாகவோ, ஒருவீரனாகவோ அல்லது குழந்தையாகவோ அவன் கருதிக் கொள்கிறான். சக்திபூஜை மிக மிகக் கடினமானது. அது விளையாட்டுக் காரியமல்ல, நான் இரண்டு ஆண்டுகள் திவ்விய மாதாவின் தோழி என்ற மனோநிலையில் இருந்தேன் ஆனால், ஜகன்மாதாவின் குழந்தை என்பது தான் எனது இயல்பான மனநிலையாக இருக்கிறது.

## வில்லங்கத்தைவிலைகொடுத்துவாங்காதீர்!

# தென்னிலங்கை கோழிக் குஞ்சுகளால் தொற்று நோய் பரவும் அபாயம்

(மந்திகை)

தென்னிலங்கையிலிருந்து கண்டி வீதி ஊடாக எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படும் கோழிக்குஞ்சுகள் தரமற்றவை என்று பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி எஸ். வசிகரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கோழிக் குஞ்சுகள் தரமற்ற கோழிப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதுடன்,

அரச அங்கீகாரம் பெறாத பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு குஞ்சுகளுக்குச் சாயம்பூசப்பட்டு சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் வளர்ச்சி வீச்சு குறைந்தவையாகவும் காணப்படுகின்றன.

இவற்றினால்வேறுதொற்று நோய்களும், தொற்றுக் கிருமிகளும் வந்து சேர்வதால் இங்குள்ள கோழிகளுக்கும் நோய்கள் பரவ சாத்தியமுள்ளது.

எனவே கொள்வனவு செய்யும் பயனாளிகள் மேற்படி விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ-23-2)

## தினசரி தியானம்

### தெய்வீக வாழ்க்கை

தெய்வீக வாழ்க்கை என்பது சேவை, பக்தி, அறிவு ஆகியவற்றின் தொகுப்பு ஆகும். இது வறண்ட வேதாந்த தத்துவம் அல்ல; இந்தக்கால மக்களுக்கு மிகவும் பொருந்தமாக உள்ளயோகங்களின்இணைப்பேயாகும். இது நிதர்சனமான மதமாகும். ஒவ்வொரு வினாடியும் நீங்கள் இறைவனுடன் உரையாட இது உதவுகிறது: இப்படியான தொடர்பினால் தான், மேலான அறம், நிலைத்த பேரின்பம், அழியாமை ஆகியவை உள்ளன.

-சுவாமி சிவானந்தர்

# அனலைதீவு மக்களின் மருத்துவ சேவைக்கு மாற்று ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு வைத்தியசாலைக்கென, சுகாதாரத் திணைக்களம் வைத்திய அதிகாரியை நியமிக்காவிட்டால், அனலைதீவு பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து வைத்திய சாலை ஒன்றினை நடத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் அனலைதீவைச் சேர்ந்தவர்கள் அண்மையில் அங்கு சென்று அனலைதீவின் அபிவிருத்தி நிலை தொடர்பாக பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடினர்.

அதன் போதே, அனலைதீவு வைத்தியசாலை இயங்காவிட்டால், பொது அமைப்புக்களைஒரு வைத்தியசாலையினை நடத்துவதற்குரிய ஒழுங்குகளினை செய்யுமாறும் அதற்கு தேவையான நிதிவசதியினைத் தாம் தருவதாகவும் உறுதி அளித்துள்ளனர்.

மேற்படி கலந்துரையாடலில் அனலைதீவைச் சேர்ந்த வெளிநாடுகளில் வசிக்கும் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

(உ-75)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

**முக்கிய அறிவித்தல்**

**வருடாந்த மகாசபைக் கூட்டம்**

தலைவர்: திரு.அ.விநாயகமூர்த்தி எம்.பி
காலம் : எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை 11.8.2002 காலை 10 மணியளவில்
இடம் : காங்கிரஸ் தலைமையகம், 120, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கள விளக் கேற்றல்,
- கொடியேற்றலும், கட்சிக் கீதம்மிசைத்தலும்
- வரவேற்புரை: திரு.தி.மகேந்திரராசா
- ஆண்டறிக்கையும், கணக்கறிக்கையும்
- தலைமையுரை
- புதிய நிர்வாகிகள் தெரிவு
- தீர்மானங்களும், வேறுவிடயங்களும்
- நன்றியுரை

**அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

நாளை சனிக்கிழமை 10-8-2002 காலை 10-30 மணிக்குச் செயற்குழு அங்கத்தவர்களின் கூட்டம் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(5805)


## யாழ். பொலிஸ் நிலையம் முன்பாக ஆட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிசாரால் ஆட்டோ சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவரை விடுவிககக் கோரியும் நேற்றுப் பிறபகல 4.30 மணியளவில் பெருமளவு ஆட்டோ சாரதிகள் ஆட்டோவில் அணி வகுதுச் சென்றுயாழ் பொலிஸ் நிலையம் முன்பாக மறியலில் ஈடுபட்டனர்.

மறியலில் ஈடுபட்டவர்களை பொலிசார் தாக்கி அங்கிருந்து விரட்டினர்.

எனினும் அவர்கள் அங்கிருந்து விலகி பொலிஸ் நிலையத்துக்கு அருகில மணிக்கூட்டு வீதியில் அமர்ந்திருந்து தமது மறியல் போராட்டத்தை

(02ம் பக்கம் பார்க்க)

### வதிரியில்..

டார் சைக்கிளில் கூட வந்த கரணவாய் மேற்கைச் சேர்ந்த திரவியம் காண்டீபன் (வயது 21) என்பவர் படுகாயமுற்ற நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-23)

### சைக்கிள்- பஸ் ...

வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

பருத்தித்தறையில் இருந்து யாழ.வந்த 750 இலக்க பஸ் மத்திய பஸ நிலையப் பகுதியில் சைக்கிளில் வந்த குடும்பஸ்தருடன் விபத்துக்குளளானது.

இதனால் குடும்பஸ்தர் பஸ் சில்லில் சிக்கி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பஸ் தரிப்பிடப் பகுதிக்கு அண்மையில் இச் சம்பவம் இடம்பெற்றபோது அதனைப் பார்த்துக் கொண்டிருந்த பொது மக்கள் அவலக் குரல் எழுப்பினர்.

சம்பவத்தை பார்த்த விசனமடைந்த சிலர் பஸ் நிலையப் பகுதிக்குள் புகுந்து பிரஸ்தாப பஸ் சாரதியையும் நடத்துனரையும் தாக்க முறபட்டனர்.

இதனை உணர்ந்த சாரதியையும் நடத்துனரும் நகரக் கடைகளுக்குள்ளால் புகுந்து தப்பியோடினர்

இதேவேளை யாழ் மத்திய பஸ் நிலையப் பகுதியில் தரித்து நின்ற சீ.ரி.பி பஸ் சாரதிகள் நடத்துனர்களை சிலர் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-06-59-2)

## ஜனாதிபதியின் உரை இன்று

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை குறித்து இன்று மாலை 7-30மணிக்கு சிங்களத்திலும் 9-40மணிக்கு ஆங்கிலத்திலும் ரூபாவாகினியில் இவ் உரை இடம் பெறும்.

ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஜனாதிபதியின உரைக்கு நேரம் ஒதுக்குவதில ஏற்பட்ட தடங்கல் காரணமாக நேற்று அவரது உரை இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


அம்பாள் துணை

**நயினாதீவு**



**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்**
**ஆடிப்பூரத் (பூரகர்மா) திருவிழா**
**11.08.2002 ஞாயிற்றுக்கிழமை**

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஆடிப்பூரத் தினத்தன்று (11.08.2002) ஞாயிற்றுக் கிழமை பகல் மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், எழுந்தருளி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும், நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகமும் (1008 சங்குகள்) ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூஜை, பூரகர்மா (ருதுசாந்தி), தீபாராதனை, திருவூஞ்சல், வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம், புஸ்பாஞ்சலி ஆகியனவும், அதனைத் தொடர்ந்து "அழகிய தாமரைப்பூ வாகனத்தில்" அம்பாள் ஆரோகணித்து வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதன் பின்னர் அடியார்களுக்கு அருட்பிரசாதமும், நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலினால் "கலியாண மண்டபத்திலும்" நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் "அமுதசுரபி" மண்டபத்திலும் அன்னதானம் (மகேஸ்வர பூஜை) சிறப்பான முறையில் வழங்கப்படும்.

**சிவாச்சாரியார்கள்**

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தான விசேஷ குருக்கள்
சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள்
(தீஷா நாமம் ஈசானசிவாச்சாரியார் - உத்தரகோவை)
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான பிரதமகுருக்கள்
சாகித்திய சிரோன்மணி, சிவாகமதிவாகரன் வித்தியாகல்பதி
சிவஸ்ரீ வை.மு.ப.முத்துக்குமாரசாமிக்குருக்கள்
(நயினாதீவு - உத்தரகோவை)
மங்கள இசை: இ.சுந்தரபாலன் குழுவினர்
(நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில்)
விசேட மங்கள இசை: K.R.சுந்தரமூர்த்தி குழுவினர் - இணுவில்

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில்
ஆடிப்பூரத்திருவிழா உபயகாரர்கள்.
நயினாதீவு

5796



**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2002**

நல்லூர் உற்சவகாலத் தற்காலிகக் கச்சான் கடலைக் கடைகள், மணிகாப்புக்கடைகள், ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள், இனிப்புக் கடைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் எதிர்வரும் 20.08.2002ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.12.30 மணிவரை மாநகர ஆணையாளராகிய என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அதேதினம் பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 281.25வும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 1000 மும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 20.08.2002 பி.ப.12.00 மணிவரை கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2002.08.08

[C/4832]



**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றி போய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
இராசையா சாவித்திரி
65, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (5782)



உ

தொண்டைமானாறு

**செல்வச்சந்நிதி ஆலய**


சித்திரபானு வருட (2002)

# செல்வச்சந்நிதி ஆலய

## சித்திரபானு வருட (2002)

# மஹோற்சவ கால நிகழ்வுகள்







துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க சேவலு மயிலும் வாழ்க
வெய்ய சூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க வன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்க விப்புவன மெல்லாம்

**நிகழும் சித்திரபானு வருடம் ஆடி மாதம் 23ம் திகதி 08.08.2002 வியாழக்கிழமை பின்னிரவு 3.00 மணியளவில் கொடியேற்ற வைபவத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகியது.**

**5ம் திருவிழா ஆடி 27 திங்கள் 12.08.2002 காலைத்திருவிழா 8.00 மணிக்கு ஆரம்பம். அன்று சதுர்த்தி மாலை 4.00 மணியளவில் விநாயகர் வேலவர் எழுந்தருளல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10ம் திருவிழா | பூங்காவனம் | ஆவணி 1 | சனிக்கிழமை | 17.08.2002 | காலை 9.00 மணி |
| 11ம் திருவிழா | கைலாசவாகனம் | ஆவணி 2 | ஞாயிறு | 18.08.2002 | காலை 8.00 மணி |
| | சப்பறத்திருவிழா | ஆவணி 4 | செவ்வாய் | 20.08.2002 | மாலை 5.00 மணி |
| | தேர்த்திருவிழா | ஆவணி 5 | புதன் | 21.08.2002 | காலை 8.30 மணி |
| | தீர்த்தத்திருவிழா | ஆவணி 6 | வியாழன் | 22.08.2002 | காலை 8.00 மணி |
| அன்று மாலை | மௌனத் திருவிழா | ஆவணி 6 | வியாழன் | 22.08.2002 | மாலை 5.00 மணி |

மு.கு: காலைத் திருவிழா 8 மணிக்கும் இரவுத்திருவிழா 4.30 மணிக்கும் நடைபெறும்.

ஆலயதிருவிழா நேர்த்தி மற்றும் அன்னதானம் சம்பந்தமான கைங்கரியங்களுக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

பிரதம குருக்கள்
ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகஐயர்

(5806)

ஆலய உரிமையாளர்
அரியரத்தினஐயர் லோகேஸ்வரஐயர்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 09.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.